**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness for | Prosecution : | **PW - 44** |
| | Defence : | |
| | Court : | |
| Name | : | தவக்குமார் |
| Father's / Husband Name | : | முருகேசன் |
| Village | : | நம்பர் 10, யசோதை நகர், வெள்ளச்சி மண்டபம், திருவையாறு |
| Taluk & District | : | திருவையாறு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2018 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of** **13.08.2018**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.கண்ணகி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, தட்டச்சர் ச.சுரேஷ்**

**CC513/2004** Date: 13.08.2018

முதல் விசாரணை

நான் நம்பர் 10, யசோதை நகர், வெள்ளச்சி மண்டபம், திருவையாறு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் உடற்கல்வி ஆசிரியராக திருவையாறு சீனிவாசராவ் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். அசா1ஐ தெரியாது. ஆஜர் 1வது எதிரியை தெரியும், வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 13.04.1999ந்தேதி தஞ்சாவூர் கணபதி ஜுவல்லரியில் மாதம் ரூபாய் 150வீதம் காமதேனு தங்க நகை சிறு சேமிப்பு திட்டத்தின் கீழ் 25மாதங்கள் ரூபாய் 3750ஐ செலுத்தியிருந்தேன். அதற்கு நகையாக கடையில் சென்று ஆஜர் எதிரியிடம் கேட்டபோது ஒருவாரம் கழித்து வருமாறு கூறினார். ஒருவாரம் கழித்து கடைக்கு சென்று பார்த்தபோது கடை பூட்டப்பட்டிருந்தது. அதன் பின்னர் மாவட்ட குற்றப்பிரிவிற்கு சென்று புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் பணம் செலுத்தியதற்கான பாஸ் புத்தகம் எண் ஏ1223ஆகும். அது சா.பொ.83ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

தஞ்சாவூர் காசுக்கடைத்தெருவில் கணபதி ஜுவல்லரி என்ற கடையே இல்லையென்றாலும், காமதேனு சிறுசேமிப்பு திட்டம் என்ற திட்டமே இல்லையென்றாலும், நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு மேற்படி திட்டத்தில் சேரவே இல்லையென்றாலும், அதே போல் தொகை எதுவும் செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. சா.பொ.83 இவ்வழக்கிற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. நான் மாவட்ட குற்றப்பிரிவு போலீசாரிடம் எழுத்துப்பூர்வமாக புகார் எழுதிக்கொடுத்துள்ளேன். போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முன் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.